புதுச்சேரி

(சுருக்கம்)

இந்து சமய நிறுவனங்கள் - புதுச்சேரி மாநிலம், மண்ணாடிப்பட்டு கொம்யூன், செட்டிப்பட்டு அருள்மிகு திரௌபதியம்மன் மற்றும் மாரியம்மன் தேவஸ்தானம் - அறங்காவலர் வாரியம் அமைத்தல் - ஆணை – பிறப்பிக்கப்படுகிறது.

---

இந்து சமய நிலையங்கள் மற்றும் வக்ஃபு துறை

அரசு ஆணை ப.வ.எண். 121/இசநி/கோ.2/2020, புதுச்சேரி, நாள்: 15.12.2020

பார்வை: 1)அரசு ஆணை ப.வ.எண்.93/இசநி/கோ.2/2012, நாள்: 21.11.2012
2) இந்து சமய நிறுவனங்கள் ஆணையர் அலுவலக கோப்பு எண்.7668/இசநி/கோ.2/2020, நாள்: 09.12.2020

-------

ஆணை:

புதுவை மாநிலம், மண்ணாடிப்பட்டு கொம்யூன், செட்டிப்பட்டு, அருள்மிகு திரௌபதியம்மன் மற்றும் மாரியம்மன் தேவஸ்தானத்திற்கு பார்வை (1)-ல் குறிப்பிட்டுள்ள அரசு ஆணை மூலம் ஓர் அறங்காவலர் வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் முடிவடைந்து விட்டது.

2. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட தேவஸ்தானத்தை நிர்வாகிப்பதற்கு வேறோரு புதிய அறங்காவலர் வாரியம் அமைக்க வேண்டியது இன்றியமையாததாகிறது.

3. எனவே, 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிலையங்கள் சட்டம் 4(1)-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, மேற்கூறிய தேவஸ்தானத்திற்கு பின்வரும் ஐந்து நபர்களை கொண்ட ஓர் அறங்காவலர் வாரியத்தை அரசு உடனடியாக அமைக்கிறது.

திருவாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. திரு. ர. குமாரராஜா, த/பெ. ரங்கநாதன்,<br>எண்.11, திரௌபதியம்மன் கோவில் வீதி,<br>செட்டிப்பட்டு, புதுச்சேரி-605501. | ---- | தலைவர் |
| 2. திரு. கு. குருமூர்த்தி,<br>த/பெ. குளுந்தைபெருமாள், எண்.28,<br>மேல வீதி, செட்டிப்பட்டு, புதுச்சேரி -605501. | ---- | துணைத்தலைவர் |
| 3. திரு. ரா. சிவகுமார், த/பெ. ராமசாமி,<br>எண்.14, பிள்ளையார் கோவில் வீதி,<br>செட்டிப்பட்டு, புதுச்சேரி -605501. | ---- | செயலாளர் |
| 4. திரு. ஆ. வேல்முருகன், த/பெ. ஆறுமுகம்,<br>எண்.35, தெற்கு வீதி, செட்டிப்பட்டு,<br>கொடுக்கூர், புதுச்சேரி -605501. | --- | பொருளாளர் |
| 5. திருமதி. பா. கலைச்செல்வி, த/பெ. பாரதி,<br>எண்.56, புது காலனி, செட்டிப்பட்டு,<br>திருக்கனூர், புதுச்சேரி -605501. | ----- | உறுப்பினர் |

4. புதிய அறங்காவலர் வாரியம் தேவஸ்தானத்தின் பொறுப்புகளை அதன் அசையும், அசையாச் சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் முந்தைய அறங்காவலர் வாரியத்திடமிருந்து உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5. 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்குட்பட்டு அறங்காவலர் வாரியத்தினர் திருக்கோயிலை நிர்வகிக்கக் கடமைப்பட்டவர்களாவர். மேலும் நிர்வாகத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய சில முக்கிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) கோயிலுக்கு சொந்தமான காலி மனைகள், கோயிலை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் கோயில் குளங்களை தூர்வாருதல் மற்றும் சுத்தம் செய்தல் இவைகள் உள்ளடக்கிய ஒரு ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) நன்கொடையாளர்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை நிறைவேற்ற முழு மூச்சுடன் ஈடுபடுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு வருடத்திற்குமான உத்தேச வரவு செலவு கணக்குகள் மார்ச் மாத காலத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) கோயில் வரவு செலவு கணக்குகளை முறையாக பராமரித்தல் மற்றும் கணக்கினை ஆண்டுக்கு ஒருமுறை கணக்கு மற்றும் கருவூலத் துறை மூலம் தணிக்கை செய்தலை உறுதி செய்ய வேண்டும்.

(v) அறங்காவலர் கடமைகளையும் பொறுப்புகளையும் இந்து சமய ஆலய விதிகள் 1975-ன் பிரிவு 5இன் படி செவ்வனே நிறைவேற்றுதல் வேண்டும்

6. அறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் இவ்வரசாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். இதற்கிடையில் அரசு அவர்களை நீக்கினால் தவிர அல்லது தகுதி இழக்கச் செய்தால் தவிர அல்லது வாரிய உறுப்பினர்கள் தங்கள் பதிவிகளை இராஜினாமா செய்யுங்கால் அவர்களின் இராஜினாமாவை அரசு ஏற்றுக்கொண்டால் தவிர வாரிய உறுப்பினர்கள் பதிவியில் இருப்பதாகக் கருதப்படும்.

/துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி/

15/12/2020

(அ. சிவசங்கரன்)
அரசு சார்புச் செயலர் (கோயில்கள்)

2020 O/C 15/12/2020

பெறுநர்:
திருவாளர்கள்:

1 திரு. ந. குமாரராஜா, தலைவர் த/பெ. ரங்கநாதன்,
2 திரு. கு. குருமூர்த்தி, துணைத்தலைவர் த/பெ குளுந்தைபெருமாள்,
3 திரு. ரா. சிவகுமார், செயலாளர் த/பெ. ராமசாமி,
4 திரு. ஆ. வேல்முருகன், பொருளாளர் த/பெ. ஆறுமுகம்
5 திருமதி. பா. கலைச்செல்வி, உறுப்பினர் த/பெ. பாரதி,

இவ்வரசாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரகாலத்திற்குள், திருக்கோயிலின் பொறுப்புக்களை அதன் அசையும், அசையாச் சொத்துகள் இதர ஆவணங்களுடன் பதவி விலகும் அறங்காவலர் வாரியத்திடமிருந்து முழுமையாகப் பெற்றுக்கொண்டு, அதுகுறித்து ஓர் அறிக்கையை பட்டியல் நகலொன்றுடன் ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி அவர்களுக்கு நேரில் சமர்ப்பிக்குமாறும், அவ்வறிக்கையின் நகலொன்றினை துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்கம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வுப் பிரிவு), புதுச்சேரி அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது. மேலும், இத்துடண் இணைக்கப்படடுள்ள சுற்றறிக்கையைப் பின்பற்றி நிர்வாகம் செய்யுமாறு கோரப்படுகிறது.

நகல் பெறுநர்:
திருவாளர்கள்:

1 திரு. ந. பூமிநாதன், தலைவர், த/பெ. நடேசன், எண். 34, பிள்ளையார் கோவில் வீதி, செட்டிப்பட்டு, கொடுக்கூர் புதுச்சேரி -605501.
2 திரு. வ. தனராக், துணைத்தலைவர் த/பெ. வரதராக், எண்.76, செட்டிப்பட்டு, கூனிச்சம்பட்டு பாதை, கொடுக்கூர் அஞ்சல், புதுச்சேரி -605501.
3 திரு. மொ. பழனி, செயலாளர் த/பெ. மொட்டையன், எண்.64, திரௌபதியம்மன் கோவில் வீதி, செட்டிப்பட்டு, கொடுக்கூர் அஞ்சல், புதுச்சேரி -605501.
4 திரு. ரா. நாராயணசாமி, பொருளாளர் த/பெ. ராமசாமி, எண். 39, மேலண்டை வீதி, செட்டிப்பட்டு, கொடுக்கூர் அஞ்சல், புதுச்சேரி -605501.
5 திரு. ஆ. ரங்கநாதன், உறுப்பினர் த/பெ. ஆதி, எண்.56, செட்டிப்பட்டு, ஜெயந்தி நகர், கொடுக்கூர் அஞ்சல், புதுச்சேரி -605501.

திருக்கோயிலின் பொறுப்புக்களை அதன் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் இதர ஆவணங்களுடன் புதிதாக அமைக்கப் பட்டுள்ள அறங்காவலர் வாரியத்திடம் ஒருவார காலத்திற்குள் முழுமையாக ஒப்படைக்குமாறு கோரப்படுகிறது.

6. இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, புதுச்சேரி — மேற்காண் அரசு ஆணையை அரசிதழில் வெளியிட்டு அதன் பத்து நகல்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கோரப்படுகிறது.
7. ஆணையர், இந்து சமய நிறுவனங்கள், புதுச்சேரி.
8. துணை இயக்குநர், கணக்கு மற்றும் கருவூல இயக்கம் (ஆலய தணிக்கை மற்றும் ஆய்வுப் பிரிவு,) புதுச்சேரி,
9. காவல் துறை கண்காணிப்பாளர் (வடக்கு), புதுச்சேரி.
10. துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) தெற்கு, புதுச்சேரி.
11. காவல்துறை கண்காணிப்பாளர் (தெற்கு) புதுச்சேரி.
12. அரசுஆணைகோப்பு/மேலாளர்(கோயில்கள்)/நிர்வாகஅதிகாரி/கோ.1/கோ.5/கோ.6/ ஆதஉ /கணிணி/உதிரிகள்.